[1970 மார்ச் 24

திரு. அ. லெ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, இப்படிப்பட்ட செவிலியர் பயிற்சிப் படிப்பு வேறு எந்த மருத்துவக் கல்லூரிகளில் தொடங்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட பயிற்சி கொடுப்பதைப் பற்றி வேறு எந்தக் கல்லூரியிலிருந்தாவது எப்பொழுதாவது கோரிக்கை வந்ததா? இப்படிப்பட்ட நிலையில் மாவட்டந்தோறும் மருத்துவக் கல்லூரி நிறுவ ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, செவிலியர் பயிற்சிக்கு, தேவையையொட்டித்தான் இவர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறது. இதற்கு முன்பு மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்வியிலிருந்து, பயிற்சி பெற்ற சிவிலியர்களே பல பேர் இருக்கிறார்கள் என்ற நிலையில் மேலும் பயிற்சி தருவதற்கான புதிய பள்ளிகளை வைக்கத் திட்டம் இல்லை. இப்பொழுதிருக்கும் நிலையே போதுமானதாகயிருப்பதால் புதிய பள்ளியோ அல்லது கல்லூரியோ வைக்கும் நோக்கம் இல்லை.

திரு. எம். சுரேந்திரன்: சார், மருத்துவ மனைகளிலே இருக்கும் நர்சுகளுக்கு, படுக்கைகளின் விகிதாசாரங்கள் ரொம்ப அதிகமாக இருக்கிறது. இதைக்குறைத்து, நர்சுகளை அதிகப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையை மருத்துவமனையைப்பற்றி ஆராய்ந்தவர்கள் சொல்லியிருக்கிறார்கள்' என்று அறியப்படுகிறதே. அந்தக் கருத்தை ஏற்று, பயிற்சி பெற்று வேலையில்லாமல் இருப்பவர்களை அதிலே ஈடுபடுத்த அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, ஒவ்வொரு செவிலியருக்கும் குறைந்த படுக்கை இருக்கவேண்டுமென்ற அடிப்படையிலே பணியைப்பொறுத்தவரையிலும் நல்ல முறையில் அமையக்கூடும். ஆனால் நிதி வசதிகள் மற்றவைகளைப் பார்த்து, அவர்களின் எண்ணிக்கையைப் பெருக்க முடியாமல் இருந்து வருகிறது.

மறைந்த திரு. அண்ணாதுரையவர்களின் நூல்கள்

515 வினா.—திரு. என் கிட்டப்பா: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மறைந்த முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்களின் எழுத்தோவியங்களை நூல் வடிவில் வெளியிடுவது அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. இரா நெடுஞ்செழியன்: இல்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்களின் எழுத்தோவியங்கள் அனைத்தையும் தொகுத்து, அச்சடித்து வழங்குவது என்றால் தனிப்பட்டவர்களுக்கு நிதி வசதி

1970 மார்ச் 24]

இருக்காது. ஆகவே, அண்ணா அவர்களுடைய எழுத்தோவியங்களை அரசாங்கமே தொகுத்து, அச்சடித்து மலிவு விலையில் மக்களுக்கு வழங்குவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா? அதற்கு வாய்ப்பு இல்லையென்றால் தனிப்பட்டவர்கள் அச்சடித்து வெளியிடுவதற்கு முன்வந்தால், அரசு அவர்களுக்கு மானியம் வழங்க முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்களின் எழுத்தோவியங்கள் பல நூல் வடிவில் வெளிவந்திருக்கின்றன. அவர்கள் குடும்பத்தைச் சேர்ந்தவரே, அவருடைய மகனே ஒரு பதிப்பகம் அமைத்து அறிஞர் அண்ணா அவர்களின் நூல்களை பல்வேறு வகையில் தொகுத்து வெளியிடவேண்டும் என்று முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். வேறு யாரும் அவைகளை வெளியிடக்கூடாது என்று பத்திரிகைகளில் கூட அறிக்கை வெளிவந்திருக்கிறது. தொடர்ந்து அண்ணா அவர்களுடைய எழுத்தோவியங்களின் தொகுப்பு நூல்களை வெளியிடுவதற்கான முயற்சியை அந்த பதிப்பகம் மேற்கொண்டிருக்கிறது. ஒன்றிரண்டு தொகுப்பு நூல்கள் வெளிவந்திருக்கின்றன. தொடர்ந்து அம்மாதிரி நூல்கள் வெளிவரும் என்று எதிர்பார்க்கின்ற காரணத்தினாலும், வேறு யாரும் வெளியிடக்கூடாது என்று அவர்கள் அறிக்கை விட்டிருக்கின்ற காரணத்தினாலும், இப்பொழுது அரசாங்கம் எடுத்துக்கொள்ளும் நோக்கம் இல்லை.

ஹாஜி ம. மு. பீர்முஹம்மது : அறிஞர் அண்ணா அவர்களுடைய குடும்பத்தாரை அணுகி அரசே அனுமதி பெற்று, அதற்குரிய ஒரு தொகையை அவர்களுக்குக் கொடுத்துவிட்டு, தமிழ் நாடு மக்கள் எல்லோருக்கும் அவர்களுடைய எழுத்தோவியங்கள் அனைத்தும் கிடைக்கக்கூடிய நிலையில் அவைகள் தேசியமயமாக்கப்படுகிற நிலையை அரசு ஏற்படுத்துமா? காந்தியடிகளின் தொகுப்பு நூல்கள் வெளிவந்ததைப்போல், நல்ல ஆராய்ச்சியாளர்களையும், அறிஞர்களையும் வைத்து, ஆய்ந்து, தொகுத்து, முறைப்படி வெளியிட்டு, மற்ற மொழியினர்களும் அறிஞர் அண்ணா அவர்கள் யார், அவர்களுடைய ஆற்றல் என்ன என்று தெரிந்துகொள்ளும் வகையில் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியைச் சுருக்கமாகப் போடுங்கள்.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : நம் அரசே அறிஞர் அண்ணா அவர்கள் தொகுப்பு நூல் வெளியிடுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அண்ணா அவர்களின் எழுத்தோவியங்கள் பல அவர்களுடைய குடும்பச் சொத்தாகக் கருதப்படுகின்றன. அவர்களே விரும்பி அரசாங்கம் இதை ஏற்று நடத்தவேண்டும் என்ற கோரிக்கை அனுப்பினால், அரசாங்கம் அப்பொழுது அதை கவனிக்கலாம். அவர்களே வெளியிடுகிற எண்ணத்தில் தான் இப்பொழுது இருந்து வருகிறார்கள்.

திரு. கே. விநாயகம் : பேரறிஞர் அண்ணா அவர்கள் பலவிதமான புத்தகங்களை எழுதியிருக்கிறார். அரசியல் வேற்றுமைகள் எப்படியிருந்தாலும், அவர் ஒரு நல்ல எழுத்தாளர் என்பதில் சந்தேகம் இல்லை. அன்றைய சர்க்கார் அவர்களுடைய ஒரு சில புத்தகங்களை பிராஸ்கிரைப் செய்திருக்கிறார்கள். இதுவரையில் அந்தத் தடை நீக்கப்பட்டதாக எனக்குத் தெரிந்து தகவல் இல்லை. அந்தப் புத்தகங்களை வெளியிடுவதற்கான தடையை நீக்குவதற்கு இந்த அரசாங்கம் முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதைப் பற்றி விவரக் குறிப்பு இல்லை. அதைப்பற்றி அரசாங்கம் யோசித்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை நிறைவேற்றுவதற்கான முயற்சியில் ஈடுபடும்.

City Compensatory Allowance to employees of aided Colleges

* 516 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Educuation and Health be pleased to state—

(*a*) whether it is a fact that City Compensatory Allowances sanctioned by the Education Department of the Tamil Nadu Government in its G.O. Ms. 372, dated 16th March 1968 has not so far been paid to the employees in the Aided Colleges;

(*b*) whether it is due to the non-receipt of any intimation from the Director of Collegiate Education; and

(*c*) if so, the reason as to why this order has not been communicated by the Director of Collegiate Education to the aided colleges?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஒரு கல்லூரியைத் தவிர ஏனைய அரசு மானியம் பெறும் எல்லாக் கல்லூரிகளும் தங்கள் ஊழியர்களுக்கு நகர ஈட்டுப்படி வழங்கியுள்ளன.

(இ) இல்லை.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

DR. H. V. HANDE : May I know whether the amount of the City Compensatory Allowance is fully reimbursed to aided colleges and, if not, whether the Ministry is aware that the managements, whose income limits have been fixed, are reluctant to implement this order with regard to the teaching and non-teaching staff? In the circumstances will not the present attitude of the Government hamper private education. Are the Government aware of the fact that there are several colleges which have not yet implemented this particular order and, if so, are the Government going to exercise any control over these colleges?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இங்கே இருக்கிற விவரக் குறிப்பின்படி எத்திராஜ் மகளிர் கல்லூரி ஒன்றைத் தவிர மற்ற கல்லூரிகளில் அது நடைமுறைப்படுத்தப்